## ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி 10: கார்க்கோடல் பூக்காள்
## (தலைவி பிரிந்த நிலையில் பிரிவாற்றாது வருந்திக் கூறுதல்)

597 * கார்க்கோடல் பூக்காள்! * கார்க்கடல் வண்ணன் என் மேல் * உம்மைப்
போர்க்கோலம் செய்து * போர விடுத்தவன் எங்குற்றான்? **
ஆர்க்கோ இனி நாம் * பூசல் இடுவது? * அணி துழாய்த்
தார்க்கோடும் நெஞ்சம் தன்னைப் * படைக்க வல்லேன் அந்தோ! 1

598 மேல் தோன்றிப் பூக்காள்! * மேல் உலகங்களின் மீது போய் *
மேல் தோன்றும் சோதி * வேத முதல்வர் வலங்கையில் **
மேல் தோன்றும் ஆழியின் * வெஞ்சுடர் போலச் சுடாது * எம்மை
மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து * வைத்துக் கொள்கிற்றிரே 2

599 கோவை மணாட்டி! * நீ உன் கொழுங்கனி கொண்டு * எம்மை
ஆவி தொலைவியேல் * வாயழகர் தம்மை அஞ்சுதும் **
பாவியேன் தோன்றிப் * பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல் *
நாவும் இரண்டுள ஆயிற்று[1] நாணிலியேனுக்கே 3

600 முல்லைப் பிராட்டி! * நீ உன் முறுவல்கள் கொண்டு * எம்மை
அல்லல் விளைவியேல் * ஆழிநங்காய்! உன் அடைக்கலம் **
கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட * குமரனார்
சொல்லும் பொய் ஆனால் * நானும் பிறந்தமை பொய் அன்றே 4

601 பாடும் குயில்காள்! * ஈதென்ன பாடல்? * நல் வேங்கட
நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் * வந்து பாடுமின் **
ஆடும் கருளக் கொடி உடையார் * வந்து அருள் செய்து *
கூடுவர் ஆயிடில் * கூவி நும் பாட்டுகள் கேட்டுமே 5

602 கணமா மயில்காள்! * கண்ண பிரான் திருக்கோலம் போன்று *
அணிமா நடம் பயின்று ஆடுகின்றீர்க்கு * அடி வீழ்கின்றேன் **
பணமாடரவணைப்[2] * பற்பல காலமும் பள்ளி கொள் *
மணவாளர் நம்மை வைத்த * பரிசிது காண்மினே 6

603 நடமாடித் தோகை விரிக்கின்ற * மாமயில்காள்! * உம்மை
நடமாட்டம் காணப் * பாவியேன் நான் ஓர் முதலிலேன் **
குடமாடு கூத்தன் * கோவிந்தன் கோமிறை செய்து * எம்மை
உடைமாடு கொண்டான் * உங்களுக்கு[3] இனி ஒன்று போதுமே? 7

---
[1] ஆய்த்து
[2] பணவாடரவணை
[3] உங்கட்கு

604 * மழையே! மழையே! மண்புறம் பூசி * உள்ளாய் நின்ற
மெழுகு ஊற்றினாற் போல் * ஊற்று நல் வேங்கடத்துள் நின்ற **
அழகப் பிரானார் தம்மை * என் நெஞ்சத்து அகப்படத்
தழுவ நின்று * என்னைத் ததர்த்திக்[4] கொண்டு * ஊற்றவும் வல்லையே? 8

605 கடலே! கடலே! உன்னைக் கடைந்து * கலக்குறுத்து *
உடலுள் புகுந்து நின்று * ஊறல் அறுத்தவற்கு ** என்னையும்
உடலுள் புகுந்து நின்று * ஊறல் அறுக்கின்ற மாயற்கு * என்
நடலைகள் எல்லாம் * நாகணைக்கே சென்று உரைத்தியே 9

606 * நல்ல என் தோழி! * நாகணை மிசை நம் பரர் *
செல்வர் பெரியர் * சிறுமானிடவர் நாம் செய்வதென்? **
வில்லி புதுவை * விட்டுசித்தர் தங்கள் தேவரை *
வல்ல பரிசு வருவிப்பரேல் * அது காண்டுமே 10

**அடிவரவு:** கார் மேல் கோவை முல்லை பாடும் கணம் நடமாடி மழையே
கடலே நல்ல தாம்

[4] ததைத்து